இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

****

ஊடக அறிக்கை

## இந்திய நன்கொடை உதவியின் கீழ் இலங்கையில் நாடு முழுவதிலுமாக 1990 அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை இப்பொழுது கிடைக்கப் பெறுகிறது

### கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சேவை நாடு முழுவதிற்குமான விஸ்தரிப்பை பூர்த்தி செய்கிறது

### இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஒரு விசேட காணொலிச் செய்தியைத் தருகிறார்

அம்பாறையில் ஜூன் 23, 2019 அன்று நடைபெற்ற ஒரு விசேட வைபவத்தில் அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை கிழக்கு மாகாணத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கௌரவ தயா கமகே, ஆரம்பக் கைத்தொழில் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் É கௌரவ கலாநிதி. ஹர்ஷா டி சில்வா, பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர் É கௌரவ அனோமா கமகே, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் , திரு. தரண்ஜித் சிங் சந்து , இந்திய உயர் ஸ்தானிகர், மற்றும் ஏனைய பிரமுகர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர் . இவ்வாரம்பித்தலுடன், அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவைகளை நாடு முழுவதற்குமாக விஸ்தரிப்பது பூர்த்தி அடைகிறது. இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களிலும் இப்பொழுது இச்சேவை கிடைக்கப் பெறுகிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கௌரவ கலாநிதி . சு. ஜெய்ஷங்கர் ஒரு விசேட காணொலிச் செய்தி மூலமாக கூடியிருந்தவர்களுக்கு உரையாற்றினார் . ஆரம்பத்திலிருந்து தனிப்பட்ட விதத்தில் இச்செயல்திட்டத்தோடு தான் தொடர்புபட்டிருந்ததை அவர் நினைவுபடுத்தினார் . இச்சேவை, அதற்கான ஒரு குறியீட்டு நாமமாக வந்துள்ளதை கலாநிதி . சு. ஜெய்ஷங்கர் குறிப்பிட்டார். வெள்ளம் மற்றும் அண்மைய பயங்கரவாதத் தாக்குதல்களின் போது இச்சேவை எவ்வாறு இலங்கைக்கு உதவியது என்பதையும் அவர் நினைவுபடுத்தினார் . இந்தியாவும் இலங்கையும் ஒன்றிணைந்து எதனைச் சாதித்துக் கொள்ள முடியுமென்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாக இச்செயல்திட்டம் உள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்திய உயர் ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்கள் தனதுரையில் , செயல்திட்டம் இந்தியாவின், பகிர்ந்து கொள்ளும் உணர்வை குறித்துக் காட்டுவதாக குறிப்பிட்டார். 'இலங்கைக்கு முதலில் பதிலிறுப்பவராக' இந்தியா என்றும் தொடர்ந்திருக்கும் என்பதையும் கூட அவர் குறிப்பிட்டார்.

அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவையின் நாடு முழுவதிற்குமான விஸ்தரிப்பு 2018, ஜூலையில் யாழ்ப்பாணத்தில் வைத்து அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் போது இந்தியாவின் கௌரவ பிரதம மந்திரி நரேந்திர மோடி இலங்கையின் கௌரவ பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவுடன் புது டெல்லியிலிருந்து ஒரு நேரலை செய்மதித் தொடர்பு மூலமாக இணைந்து கொண்டார். இந்த அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை 2018 ஜூலை மாதத்திலிருந்து வட மாகாணத்திலும் É 2018 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஊவா மாகாணத்திலும் É அந்த வருடத்தின் செப்டெம்பர் மாதத்திலிருந்து வட மத்திய மாகாணம் É ஒக்டோபர் மாதத்திலிருந்து வட மேல் மாகாணத்திலும் É 2018 நவெம்பர் மாதத்திலிருந்து மத்திய மாகாணத்திலும் É மற்றும் 2019 ஜனவரி மாதத்திலிருந்து சப்பிரகமுவ மாகாணத்திலும் கிடைக்கப் பெறுகிறது.

2015 மார்ச் மாதம் இந்தியப் பிரதம மந்திரி கௌரவ நரேந்திர மோடி அவர்களின் இலங்கை விஜயத்தின் போது , இலங்கைப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் இந்தியப் பிரதமரிடம் , இலங்கையில் வைத்தியசாலை முன்னனுமதி அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை ஒன்றினை ஆரம்பித்து வைப்பதற்கு, ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதற்கமைய, ஒரு US $ 7.5 மில்லியன் இந்திய நன்கொடை உதவியின் கீழ் ஜூலை 2016 இல் தென் மற்றும் மேல் மாகாணங்களில் 1990 அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது . இந்த நன்கொடை 88 நோயாளர் காவுவண்டிகளைக் கொள்வனவு செய்தல், ஒரு வருடத்திற்கு, சேவைக்கான நடைமுறைச் செலவு மற்றும் அவசரகால பதிலிறுப்பு மையம் ஒன்றை ஸ்தாபிக்கும் செலவு என்பவற்றை உள்ளடக்கியதாக இருந்தது.

செயல்திட்டத்தின் நேர்மறைத் தாக்கத்தை கருத்தில் கொண்டு, இலங்கைப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவையை நாடு முழுவதிலுமாக விஸ்தரிப்பதற்கு இந்தியப் பிரதம மந்திரியிடம் வேண்டுகோள் விடுத்தார். மே 2017 இல், இலங்கைக்கான தனது விஜயத்தின் போது, இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் நாடு முழுவதிலுமாக நோயாளர் காவுவண்டிச் சேவையினை விஸ்தரிப்பது தொடர்பிலான ஒரு அறிவித்தலை இந்தியப் பிரதம மந்திரி கௌரவ நரேந்திர மோடி அவர்கள் விடுத்தார் . 209 நோயாளர் காவுவண்டிகளின் கொள்வனவு , ஒரு வருடத்திற்கான சேவையின் நடைமுறைச் செலவுகள் மற்றும் பயிற்சிச் செலவுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக நாடு முழுவதிலுமான விஸ்தரிப்பை மேற்கொள்வதற்கு இந்தியாவினால் US $ 15.02 மில்லியன்கள் ஒரு மேலதிக நன்கொடைத் தொகையாக வழங்கப்பட்டது.

விரைந்த பதிலிறுப்பு நேரம், வினைத்திறனான செயல்முறைகள், மற்றும் உள்ளூர் ஆட்களை சம்பந்தப்படுத்தி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி என்பவற்றை கவனத்தில் கொண்டு இச்சேவை பாராட்டிப் போற்றப்பட்டது.

இலங்கையின் எந்தத் தொலைத் தொடர்பு வலையமைப்பு மூலமாகவும் ‘1990’ எனும் இலக்கத்தை வெறுமனே அழுத்திப் பெறக்கூடிய இந்தக் கட்டணமின்றிய அவசரகால நோயாளர் காவுவண்டிச் சேவை , இலங்கையில் இந்திய வீடமைப்பு செயல்திட்டத்திற்கு அடுத்து பாரிய இந்திய நன்கொடை செயல்திட்டமாக அமைந்துள்ளது.

இலங்கையின் சொந்தத் தெரிவுகள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் மக்கள் நலன் சாரந்த செயல்திட்டங்களின் பயனுறுதியான அமுல்படுத்துதலின் அடிப்படையிலும் இலங்கையுடனான இருதரப்பு பங்குடமைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு இந்தியா பற்றுறுதி கொண்டதாக தொடர்ந்துமுள்ளது.

******

கொழும்பு
23 ஜூன் 2019